**கூடுதல் சார்பு நீதிமன்றம், செங்கல்பட்டு**
**அசல் வழக்கு எண். 300/2024**

**தேதி – 04.08.2026**
**பெயர் – ஆறுமுகம்** (PW1 )
**<u>சாட்சி அழைக்கப்பட்டு 1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வாங்கிய மனையில் வீராசாமி வீடு கட்டிவிட்டார் அதை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்தேன். ஏகாம்பரம் வழக்கு சொத்தை 1941 ல் கிரையம் வாங்கியது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஐ தாக்கல் செய்தது பற்றி ஞாபகம் இல்லை. ஏகாம்பரத்திற்கு 2 பெண் குழந்தைகள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் தான் வழக்கு சொத்திற்கு முழு உரிமையாளர்கள் என்றால் சரிதான். இந்த 2 பெண்கள் குழந்தைகள் பாலாம்மாள் மற்றும் பரிபூரணம் ஆகியோர்களிடமிருந்து தான் நான் கிரையம் வாங்கினேன். அவர்கள் பெயரில் உள்ள கிரைய பத்திரம் மற்றும் பட்டா நான் பார்க்கவில்லை. நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.2 ஆவணத்தை என்னால் படிக்க இயலவில்லை. எனக்கு எழுத,படிக்க ஓரளவிற்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு விவரம் கூறியது நான்தான். தாவா சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு பக்க எல்லைகள் நான் கூறிதான் போடப்பட்டது. 2 அயிட்ட சொத்திற்கு வடக்கு பக்கம் ரோடு காட்டப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.ஆ.2 ல் 1வது அயிட்டத்திற்கு நான்கு பக்க எல்லை குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. 2வது அயிட்ட சொத்திற்கு எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி தெரியாது. வா.சா.ஆ.2 ல் வடக்கு எல்லை ரோடு என்று குறிப்பிடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்திற்கு என் பெயருக்கு பட்டா எப்போது பெற்றேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த சொத்தில் முனியசாமிக்கும், தாமோதரனுக்கும் சம்பந்தம் கிடையாது. சர்வே எண் 124/4ஏ 1ல் 9 செண்ட் நிலத்தை தாமோதரன் மற்றும் அவரது மகன் மணி என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது. அதன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1. சர்வே எண் 124/4ஏ 1 ல் மொத்த பரப்பு 26 செண்ட் என்று சொன்னால் சரியல்ல. 1991 ல் நான் பெற்ற கிரைய ஆவண அடிப்படையில் தான் வருவாய் துறையினர் நிலத்தை அளந்து உட்பிரிவு செய்து கொடுத்தார்கள் என்றால் சொத்தை வருவாய் துறையினர் இதுவரை அளக்கவில்லை. வா.சா.ஆ.5 ஐ என்னை விசாரிக்காமலும், நிலத்தை அலக்காமலும் கொடுக்கப்பட்டது. 3 ம் நபர்களுக்கு நத்தம் யு.டீ.ஆர். காலத்தில் பட்டா மாற்றம் செய்தது குறித்து நான் ஆட்சேபனை கொடுக்கவில்லை. வழக்கு போடுவதற்கு முன் நிலஅளவையர் மூலமாக சொத்தை அளக்கவில்லை. என்னுடைய

இடத்தில் வீடு கட்டியதால் காலி சுவாதினம் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வீராசாமி 2024 ல் தான் வீடு கட்டினார். மாதம் தேதி ஞாபகம் இல்லை. வீராசாமி 2007 ல் வீடு கட்டும் போது நான் ஆட்சேபணை தெரிவிக்க வில்லை என்றால் சரியல்ல. இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கக்கூடியது என்றால் சரியல்ல. வழக்கிற்காக வடக்கு பக்கம் ரோடு இருப்பதாக காண்பித்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு முரண்தடை தோஷத்தால் பாதிக்ககூடியது என்றால் சரியல்ல. புலப்படத்தை திருத்துவதற்கு RDO இடம் மனு கொடுக்கவில்லை. பாலாம்மாள், பரிபூரணம்மாள் எழுதி கொடுத்துள்ள செட்டில் மெண்ட் மற்றும் பாகபிரிவினை பத்திரம் உண்மையானது என்றால் சரியல்ல. நான் ஈகைரத்தினபுரத்தில் கிரையம் பெற்றுள்ள 10 ஏக்கரில் 2 ஏக்கர் புறம்போக்கு நிலமாகும். பாக்கி 8 ஏக்கர் நிலத்திற்கு பட்டா வாங்கிவிட்டேன். 1994 ம் ஆண்டு தாவா சொத்திற்கு பிரதிவாதிகளிடமிருந்து பட்டா வழங்கப்பட்டு வீடும் கட்டி அனுபவம் செய்து வருவதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1994 ம் ஆண்டு இதர சொத்துகளுக்கும் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றால் வருடம் ஞாபகம் இல்லை. தாவா சொத்து எனக்கு உரிமை கிடையாது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>9,10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

9,10 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கில் நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். ஆகையால் மேற்படி பிரதிவாதிகள் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றாலும், அவர்களை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல .